பெருமாள்பாளையம் பகுதிகளிலே ஏதாவது ஒரு இடத்தில் வாரத்திற்கு ஒருமுறை செயல்படுகின்ற பகுதிநேரக் கடைகளைத் திறக்க வேண்டும். இப்போது நிறைய இடங்களில் பெண்களை நியமனம் செய்து இருக்கின்றீர்கள். அதேபோல், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கு வாழ்வளிக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், தனியாக அந்தப் பகுதிகளிலே பெண்களுக்கு என்று ஒரு கடையை ஆரம்பித்து, அந்தப் பகுதி மக்கள் அத்தியாவசிய உணவுப் பண்டங்களை வாங்குவதற்காகப் படும் அல்லல்களைத் தவிர்க்கின்ற வகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில், அதற்கான வழிமுறை செய்யப்படுமா என்பதை உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே என்னுடைய விடையிலே தந்திருக்கிறேன். இன்றைக்கு, புரட்சித் தலைவி அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிற, பெண்களால் நடத்தப்படுகின்ற பகுதி நேரக் கடையை, காங்கேயம் தொகுதியிலே பரீட்சார்த்தமாக ஒரு கடையை அங்கே உருவாக்கி, அதனுடைய முன்னேற்றம் எப்படி இருக்கிறது என்பதைக் கண்காணித்து வருகின்றோம். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதுபோல, இந்தியாவிலே இன்று தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னாலேதான் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்திலே தன்னுடைய நிலையை சாதித்துக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 438, திரு.நா.சா. பழனிசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. வி. பி. சந்திரசேகர் கேட்கிறார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

438—

கிணத்துக்கடவில் பேருந்து நிலையம் அமைத்தல்

***11068—**திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு பேரூராட்சி சந்தை வளாகத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1995 ஏப்ரல் 25]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பேருந்து நிலையம் அமைக்க கருத்துரு நடவடிக்கையில் உள்ளது.

முற்பகல் 11-05

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு நகரம் என்பது பொள்ளாச்சிக்கும், கோயம்புத்தூருக்கும் இடையில் இருக்கின்ற நகரம். பக்கத்திலே இருக்கின்ற கிராம மக்கள் எல்லாரும் கிணத்துக்கடவு வந்துதான் பேருந்துகளிலே ஏறி பொள்ளாச்சிக்கோ, கோவைக்கோ செல்ல வேண்டும். அப்படி இருக்கிறபோது, பேருந்துகள் எல்லாம், அந்தச் சாலைகளிலே நின்று, மக்களை ஏற்றிச் செல்கிற காரணத்தினாலே, போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுகிறது. இதனை அறிந்து, அமைச்சர் அவர்கள், விரைவாக, இந்த ஆண்டே அங்கே பேருந்து நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியுள்ள காரணத்தினாலேதான், இன்றைக்கு கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு என்று ஒரு பஸ் நிலையம் உருவாக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்து, சுமார் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே அங்கு ஒரு பேருந்து நிலையத்தை உருவாக்குவதற்காக, கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, பேரூராட்சி இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே பேருந்து நிலையம் என்று சொல்கிறபோது, அங்கே இருக்கிற பேரூராட்சி அதைத் திருப்பிச் செலுத்துகிற ஒரு தன்மையைப் பெற்றிருக்க வேண்டும். இன்றைக்கு, கிணத்துக்கடவு பேரூராட்சியின் நிதியாதாரம், ஆண்டொன்றுக்கு வருமானம் சுமார் 5 இலட்சம் ரூபாய் வரையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசின் மூலமாக அது இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு கடன் வழங்கலாம் என்ற முடிவின்படி, 'இன்டெக்ரேடட் அர்பன் டெவலப்மெண்ட் புரோக்ராம்' என்று சொல்கிற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக அந்தக் கருத்துரு பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கடன் உதவி கிடைக்கப் பெற்றவுடன் உடனடியாக அங்கு பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.